[திரு. எஸ். இராசாராமன்] [1987 ஏப்ரல் 21

யும் மாணவர்களை கல்லூரிகளில் சேர்க்கிறார்கள். இதனால் பணம் படைத்த மாணவர்கள்தாம் அந்தக் கல்லூரிகளில் இடம் பெறுகிறார்கள். மதிப்பெண்கள் அதிகமாகப் பெற்ற சிலர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இதை அரசு அறியுமா? இந்த முறையை மாற்றி அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, 50 சதவிதம் தகுதி அடிப்படையில் சேர்க்க வேண்டும் என்று ஆணை இடப்பட்டிருக்கிறது. அரசுக்கு அவ்வப்போது தகவல்கள் வருகிறபோது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. சைதை சா. துரைசாமியின் கவன ஈர்ப்பு மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகிறது. அடுத்த கவன ஈர்ப்பு.

(ஈ) உதகமண்டலத்தில் திறந்த வெளியரங்கு கட்டும் பணி.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம் உதகையில் வெளி விளையாட்டு அரங்கம் கட்ட நிதி ஆதாரம் இருந்தும், அடிக்கல் நாட்ட தேதி குறிக்கப்பட்டும் பணி தொடங்கப்படாமையால் மக்களிடையேயும், விளையாட்டு வீரர்களிடையேயும் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உதகமண்டலத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு திறந்த வெளி அரங்கு ஒன்று அவசியம் என பொதுமக்களால் நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருவதாகவும், இதற்கு ஒரு செயல்

1987 ஏப்ரல் 21] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

வடிவம் கொடுப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் 22 அங்கத்தினர்களைக் கொண்ட "விளையாட்டு அரங்கு குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து திறந்த வெளி அரங்கு ஒன்று உதகமண்டலத்தில் கட்டுவதற்கு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி உதவி கோரி கருத்துரு ஒன்று அனுப்பியிருந்தார். இவ்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு மைய அரசின் திட்டக்குழு தனது ஒப்புதலை அளித்து ரூ. 32.00 இலட்சம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கிடும் செய்தது. இவ்விளையாட்டு அரங்கை உதகமண்டலத்திலுள்ள பிரிக்ஸ் நினைவுப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் அமைக்க நீலகிரி மாவட்ட ஆட்சியர் தலைமையிலான அப்பள்ளியின் மேலாண்மைக்குழு முடிவு செய்து அதற்கான நிலத்தை எந்தவிதமான நிபந்தனையும் இன்றி அரசுக்கு சரண் செய்திட 14—8—1986 அன்று முடிவு செய்துள்ளது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு மற்றும் பிரிக்ஸ் பள்ளி மேலாண்மைக் குழுவின் தீர்மானம் இவற்றின் அடிப்படையில் திறந்த வெளி அரங்கு கட்டுவதற்கு ரூ. 32.00 இலட்சம் நிதியுதவி வழங்கி அரசு ஆணை எண் 178, திட்டம் மற்றும் வளர்ச்சி (ம.மே.தி.) துறை, நாள் 23—9—1986ல் அரசு ஆணை பிறப்பித்தது. உதகமண்டல நகர வாசிகளில் ஒருசிலர் இத்திறந்த வெளியரங்கை பிரிக்ஸ் பள்ளியின் மைதானத்தில் கட்டுவதால் அதன் அருகில உள்ள அரசினர் தாவர இயல் பூங்கா மற்றும் ராஜ்பவன் வளாக சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படும் எனவும் பிரிக்ஸ் பள்ளியின் திறந்தவெளியினை தங்கள் உல்லாசப் பயணத்துக்குப் பயன்படுத்தி வரும் மக்களுக்கும் பள்ளிக் குழந்தைகள் அந்த திறந்த வெளியில் சுதந்திரமாக விளையாடுவதற்கும் பாதிப்பு ஏற்படும் எனவும் கூறி பிரிக்ஸ் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இவ் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குத் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர். சுற்றுப்புறச் சூழலுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அந்த அரங்கைக் கட்டுவது பற்றிய கருத்துரு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதுபற்றி இறுதி முடிவு எடுக்கும் வரை இந்த விளையாட்டு அரங்கு கட்டும் பணியை அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

திரு. கே. உச்சி: பேரவைத் துணைத் தலைவா அவர்களே, இந்த விவர அறிக்கையின்படி யாரோ சிலர் அந்தப் பகுதியி லுள்ள பொட்டானிக் கார்டனுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையும் மற்றும் கவர்னர் மாளிகை சூழ்நிலையும் கெட்டு விடும் என்று தவறான ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். அப்படிச் சொன் னவர்கள் யாரும் நீலகிரியில் வாழ்பவர்கள் அல்லர். நீலகிரியில் வாழ வந்தவர்கள், அங்கேயே குடியிருப்பவர்கள் அல்லர், என் பதை நான் சொல்வதோடு அதை நிராகரித்து உடனடியாக அந்த அரங்கைக் கட்ட வேண்டும், அதைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்படி அரங்கு கட்டுவதற்குரிய இடத்தை 14—8—1986 அன்று தருவதாக சம் பந்தப்பட்ட உரிமையாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். 23—9—1986-ல் அதைக் கட்டுவதற்கு 32 லட்சம் ரூபாயை மத்திய அரசு உதவி, ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர்கள் அங்கே ஏற்கெனவே நிரந்தரமாக குடியிருந்தவர்களாக இருந்தாலும், அல்லது குடியிருக்க வந்திருந்தாலும் ஆட்சேபணை கிளப்புகிற போது, அந்த ஆட்சேபணையைக் கவனிக்க வேண்டியது அரசி னுடைய கடமையாகும். சுற்றுப்புறச் சூழல் கெட்டு விடு மென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேளாண் மைத் துறைச் செயலரை நேரில் பார்த்து வரச் சொல்லி அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. தனியாக தலைமைச் செயலாளர் சென்று பார்த்து அவருடைய அறிக்கை பெற விருக்கிறது. ஆகவே அங்கேயுள்ள மக்களுடைய ஆசையை, அங்கே அரங்கம் கட்டப்பட வேண்டுமென்ற எண்ணத்தை விரை வில் அமல்படுத்த இந்த அரசு நடவடிக்கையெடுக்கும்.

திரு. கே. உச்சி: துணைத் தலைவர் அவர்களே, அந்த மக்களுடைய எண்ணம் விரைவில் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலை வருடைய அறிக்கை வந்திருக்கும் என்று கருதுகிறேன். விவசாய இலாக்கா செயலாளரின் அறிக்கையும் வந்திருக்கிறது. மற்ற அறிக்கைகள் எப்போது வரும்? இந்த பணி எப்போது ஆரம்பிக் கப்படும்? இந்த அரங்கம் நீண்ட நாட்களாகக் கட்டப்படாமல்

1987 ஏப்ரல் 21] [திரு. கே. உச்சி]

இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே அந்த மக்களுடைய குறையை உடனடியாக தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு நிலம் கொடுத்த தேதி மற்றும் இதைக் கட்டுவதற்கு 32 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப் பட்ட தேதியெல்லாம் சொல்லியிருக்கிறேன். தலைமைச் செயலர் நேரில் சென்று ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். அதைப் பெற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு ஒரு திங்களுக்குள் இதற்கு இறுதியான முடிவு எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) அம்பாசமுத்திரம் வட்டத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: துணைத் தலைவர் அவர்களே, "தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் குறும்பாகுளத்திற்கு எலுமிச்சை ஆற்றின் குறுக்கே விவசாயிகளால் போடப்படும் மண் அணை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே சிறிய அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் உள்ள குறம்பா குளத்தை பாய்விக்க, எலுமிச்சை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம், ஏற்கனவே ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 1986-87-இன் பணிகளின் அடுக்கம் தொகுப்பு எண் 1-இல் சேர்க்கப்பட்டு இத்தொகுப்பையும் அரசு செயல்படுத்த அரசு ஆணை எண் 162, ஊரக வளர்ச்சி (ஊ.நி.வே.உ.தி. 1) துறை, 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்